பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

14 03 2025 **FRIDAY** **7.15 PM**

தலைப்புச் செய்திகள்

1. பிரதமரின் கதிசக்தி இயக்கத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுவரும் மும்பை, சென்னை நெடுஞ்சாலை கட்டமைப்பு, மேம்பாடு உள்ளிட்ட எட்டு போக்குவரத்துத்திட்டங்கள் குறித்து மத்திய அரசு ஆய்வு செய்தது.

2. இஸ்ரோ கடந்த பத்தாண்டுகளில் 393 செயற்கைக்கோள்களை வர்த்தக ரீதியாக செலுத்தியதில் 143 மில்லியன் டாலர் வருவாய் ஈட்டியுள்ளதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

3. புவி வெப்பமயமாதல் காரணமாக கடந்த ஆண்டில் கடல்மட்டம் எதிர்பார்த்ததையும்விட விரைவாக உயர்ந்துள்ளது என்று அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையம் கூறியுள்ளது.

4. ஈரான் மீதான தடைகளை அமெரிக்கா நீக்க வேண்டும் என சீனா, ரஷ்யா, ஈரான் ஆகிய நாடுகள் கூட்டாக கோரிக்கை வைத்துள்ளன.

5. தாய்லாந்து சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைதேகி சௌத்ரி – **Shrivalli Bhamidipaty** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

*-- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>>

பிரதமரின் கதி சக்தி இயக்கத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுவரும் எட்டு முக்கிய சாலை, ரயில்வே மற்றும் மெட்ரோ திட்டங்கள் குறித்து இன்று மத்திய அரசு ஆய்வு செய்தது.

பிரதமரின் கதிசக்தி திட்டங்களுக்கான திட்டமிடல் குழுவின் 89-ஆவது கூட்டத்தில், மும்பை, புனே, சென்னை மார்க்கத்தில் பயணியர் மற்றும் சரக்கு போக்குவரத்து அதிகரித்து வருவது குறித்தும், இதற்கான கட்டமைப்புகளை விரிவுபடுத்தவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

மேகாலயாவில் தேசிய நெடுஞ்சாலை 62-ஐ இருவழிசாலையாக தரம் உயர்த்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

ரயில்வேத்துறையில் 32 கிலோமீட்டர் தூரத்திற்கான பிரவுன் பீல்டு திட்டம் குறித்தும் இக்கூட்டத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் மெட்ரோ ரயில் திட்டத்தை கொண்டுவருவது குறித்தும் பிரதமரின் கதிசக்தி திட்டக்குழு ஆய்வு செய்தது.

<<<<<<>>>>>>

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் இஸ்ரோ, வர்த்தக ரீதியாக வெளிநாட்டு செயற்கைக்கோள்களை செலுத்தியதில் 143 மில்லியன் டாலர் அந்நிய செலாவணி வருவாய் ஈட்டியுள்ளதாக அந்நிறுவனத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பத்தாண்டுகளில் 390 வெளிநாட்டு செயற்கைக்கோள்களும், மூன்று இந்திய தனியார் செயற்கைக்கோள்களும் வர்த்தக ரீதியாக செலுத்தப்பட்டுள்ளதாக மத்திய விண்வெளித்துறை கூறியுள்ளது.

ஜனவரி 2015-ஆம் ஆண்டு முதல், 2024-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை **PSLV**, **LVM-3, SSLV** ஆகிய செலுத்து வாகனம் மூலம் இந்த செயற்கைக்கோள்களை செலுத்தும் பணி வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

அமெரிக்கா, பிரிட்டன், சிங்கப்பூர் உள்ளிட்ட 34 நாடுகளின் செயற்கைக்கோள்களை இந்த காலக்கட்டத்தில் இஸ்ரோ விண்ணில் செலுத்தியுள்ளதாகவும் வெளியுறவுத்துறை கூறியுள்ளது

<<<<<<>>>>>>

கடந்த ஆண்டு எதிர்பார்த்ததைவிடவும் உலகில் ஒட்டுமொத்தமாக கடல் மட்டம் விரைவாக உயர்ந்துள்ளதாக அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டில் கடல்மட்ட உயர்வு பூஜ்யம் புள்ளி நான்கு சென்டிமீட்டராக இருக்கும் என கணிக்கப்பட்ட நிலையில், பூஜ்யம் புள்ளி ஐந்து ஒன்பது சென்டிமீட்டராக உயர்ந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

புவி வெப்பமயமாதல் காரணமாக கடல் நீர்மட்டம் உயர்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெப்பம் காரணமாக அதிக அளவில் பனிமலைகள் உருகி, கடலில் கலப்பதாலும் கடல் நீர் இயல்பைவிட அதிக அளவு வெப்பமாவதாலும் கடல் மட்டம் வேகமாக உயர்ந்து வருவதாக நாசா விளக்கம் அளித்துள்ளது. கடந்த 2024-ஆம் ஆண்டு அதிக வெப்பமான ஆண்டாக இருந்ததையும் நாசா சுட்டிக்காட்டியுள்ளது.

<<<<<<>>>>>>

உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா மூன்று நாள் பயணமாக இன்று அஸ்ஸாம் செல்கிறார்.

நாளை முதல் பல்வேறு நிகழ்ச்சிகளில் அவர் கலந்துகொள்ள திட்டமிட்டுள்ளார்.

நாளை காலை **Lachit Barphukan ’** காவல்துறை பயிற்சி கல்லூரியில் நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் திரு அமித் ஷா, காவல்துறையினருக்கான குடியிருப்புகளை கட்டுவதற்கு அடிக்கல் நாட்டுகிறார்.

அஸ்ஸாம் முதலமைச்சர் திரு ஹிமந்த பிஸ்வ சர்மா, மத்திய அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் ஆகியோரும் இதில் கலந்துகொள்கின்றனர்.

பின்னர், **Aizawl** –ல் அஸ்ஸாம் ரைஃபிள்ஸின் செயல்பாடுகளை அவர் பார்வையிடுகிறார்.

பின்னர் குவஹாத்தி செல்லும் திரு அமித் ஷா, ஞாயிற்றுக்கிழமையன்று கொக்ரஜார் மாவட்டத்தில் உள்ள **'Dotma'** செல்கிறார்.

57-ஆவது போடோ பயிற்சி மாணவர்கள் கருத்தரங்கில் அவர் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளார்.

அஸ்ஸாம் மாநிலத்தில் புதிய குற்றவியல் நடைமுறை சட்டங்களின் செயல்பாடுகள் குறித்து திரு அமித் ஷா ஆய்வு செய்ய உள்ளார்.

<<<<<<>>>>>>

இந்தியா – அமெரிக்கா இடையிலான இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் குறித்து அமெரிக்க பிரதிநிதி **Jamieson Greer** –வுடன் பேச்சு நடத்துவதை தாம் எதிர்நோக்கி உள்ளதாக மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இருநாடுகளுக்கும் இடையிலான விரிவான நட்புறவு, இந்தியாவின் நெருங்கிய நட்புறவு நாடு என்ற அடிப்படையிலும், வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கின் அடிப்படையிலும் மத்திய அரசு இந்த வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் திரு பியூஷ் கோயல் கூறினார்.

கடந்த வாரம் அமெரிக்க பயணம் மேற்கொண்ட திரு பியூஷ்கோயல், அந்நாட்டின் வர்த்தக தொழில்துறை அமைச்சருடன் இருதரப்பு பேச்சுக்கள் நடத்தினார்.

இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் இந்திய – அமெரிக்க உறவுகளில் ஒரு முக்கிய மைல்கல்லாக விளங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் தருமபுரி மாவட்டத்தில் மக்கள் மருந்தகங்கள் மூலம், அனைத்துத்தரப்பு மக்களும் பயன்பெற்று வருகின்றனர்.

மலிவான விலையில் தரமான மருந்துகள் தங்களுக்கு மக்கள் மருந்தகங்களில் கிடைப்பதால் அன்றாட மருந்துச்செலவு கணிசமாக குறைந்துள்ளது என்று பயனாளிகள் தெரிவித்தனர்.

<<<<<<>>>>>>

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களை கொண்டுவருவதில் இந்தியா முன்னோடியாக விளங்குகிறது என்று இந்திய ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு சஞ்சய் மல்ஹோத்ரா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில், பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகள் குறித்த கருத்தரங்கில் உரையாற்றிய அவர், கரிம பொருட்களின் தாக்கத்திலிருந்து சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் கடனுதவி வழங்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களுக்கு வளர்ந்த நாடுகளைவிட, வளர்ந்துவரும் நாடுகள் அதிக முக்கியத்துவம் அளித்து வருவதாகவும் அவர் கூறினார்.

இந்தியாவை பொறுத்தமட்டில் சூரிய மின்சக்தி, உயிரி எரிசக்தி, காற்றாலைகள், சிறிய அளவிலான நீர்மின் திட்டங்கள், மரபுசாரா எரிசக்தித் திட்டங்களுக்கு கடனுதவிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கிராமப்புறங்களில் மின் திட்டங்களை முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்துவதற்கு இந்தியாவில் கடனுதவி வழங்கப்பட்டு வருவதாகவும் திரு சஞ்சய் மல்ஹோத்ரா கூறினார்.

<<<<<<>>>>>>

ஜம்மு காஷ்மீரில் சாலை விபத்துகள் மற்றும் அதனால் ஏற்படும் உயிரிழப்பை தடுக்கும் நோக்கில், ஜம்மு காஷ்மீர் சாலை பாதுகாப்பு கொள்கையை யூனியன் பிரதேச அரசு அறிவித்துள்ளது

2030-ஆம் ஆண்டுக்குள் சாலை விபத்துகளை பாதியாக குறைப்பதற்கான ஒட்டுமொத்த ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை அனைத்துத்தரப்பினரின் ஒத்துழைப்போடு மேற்கொள்ள ஜம்மு காஷ்மீர அரசு முடிவு செய்துள்ளது

போக்குவரத்துத்துறை அமைச்சர் தலைமையில் சாலை பாதுகாப்பு கவுன்சில் அமைக்கப்படும் என்றும், பாதுகாப்பு குறித்த ஆலோசனைகளையும், உதவிகளையும் வழங்குவதில் கூடுதல் போக்குவரத்து ஆணையரின் தலைமையிலான முன்னணி நிறுவனம் இந்த கவுன்சிலுக்கு துணையாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாலை போக்குவரத்துத்துறை கூடுதல் ஆணையர், சாலை பாதுகாப்பு கொள்கையை நடைமுறைப்படுத்துவது மற்றும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவது உள்ளிட்ட முக்கிய விஷயங்களை கவனிப்பார்.

அடிக்கடி விபத்துகள் நிகழும் சாலைகள் மற்றும் பகுதிகள் கண்டறியப்பட்டு, குறிப்பிட்ட கால அடிப்படையில் சாலை கட்டமைப்பை மேம்படுத்துவது உள்ளிட்ட பணிகள் நிறைவேற்றப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

கடந்த 2023-ஆம் ஆண்டு ஜம்மு காஷ்மீரில் 22 லட்சத்துக்கும் மேற்பட்ட வாகனங்கள் விபத்துக்குள்ளானதாகவும், இந்த விபத்துகளில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

40 சதவீதத்திற்கும் மேற்பட்ட விபத்துகள் ஜம்மு, உதாம்பூர், சம்பா, கத்துவா பகுதிகளில் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

மின்னணு ஊடகங்கள், சமூக வலைதளங்கள், அச்சு ஊடகங்கள் வாயிலாக பொதுமக்களிடையே சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை விரிவான அளவில் மேற்கொள்ளவும் ஜம்மு காஷ்மீர் அரசு முடிவு செய்துள்ளது

**<<<<<<>>>>>>**

ஈரான் மீதான தடைகளை அமெரிக்கா நீக்க வேண்டும் என சீனா, ரஷ்யா, ஈரான் ஆகிய நாடுகள் கூட்டாக கோரிக்கை வைத்துள்ளன.

இந்நாடுகளின் பிரதிநிதிகள் பெய்ஜிங்கில் சந்தித்து ஆலோசனை நடத்தினர்.

**<<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

தாய்லாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைதேகி சௌத்ரி – **Shrivalli Bhamidipaty** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**<<<<<<END>>>>>>**